கரூர் நகராட்சி
கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2021ம் ஆண்டு ஜனவரி 06ம் நாள் புதன்கிழமை மாலை 4.25மணிக்கு கரூர் நகராட்சியின் மன்ற அவசரக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் திருமதி.கே.எம்.சுதா, பி.எஸ்.சி., எம்.ஏ., பி.எட்., அவர்கள் தலைமையில் மன்றக் கூட்டத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

1)மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் அவர்களின் செயல்முறை உத்திரவு கடிதம் ந.க.எண்.452/Mines/2020, நாள்.04.01.2021ல் கரூர் மாவட்டம், கரூர் வட்டத்தில் அமைந்துள்ள கனிம சுரங்கப் பணிகளினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளான உப்பிடமங்கலம் மேற்கு, வெள்ளியணை தெற்கு, ஜெகதாபி, பாகநத்தம் மற்றும் க.பிச்சம்பட்டி கிராமங்கள் மற்றும் மண்மங்கலம் வட்டத்தில் ஆத்தூர், பஞ்சமாதேவி மற்றும் அப்பிபாளையம் கிராமங்கள் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் வாழும் மக்கள் பெரும்பான்மையானவர்கள் பயன்பெறும் வகையிலும் மற்றும் கரூர் நகரத்தில் உள்ள பொதுமக்களுக்கு மழைக்காலங்களில் இரட்டை வாய்க்காலில் மழைநீர் தேங்காவண்ணம் இருக்கவும், இரட்டைவாய்க்கால் பகுதிக்கு அருகில் அமைக்கப்பட உள்ள சாலையில் பொதுமக்கள் போக்குவரத்து மேற்கொள்ளவும், இரட்டை வாய்க்காலினை சீரமைக்க ரூ.2.50கோடி மதிப்பீட்டில் சுமார் 435 மீட்டர் நீளத்திற்கு பணியினை மேற்கொள்வதற்கு கனிமவள நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கனிம சுரங்கப் பணிகளினால் பாதிக்கப்பட்ட பகுதி மற்றும் அருகில் வசித்து வரும் பொதுமக்கள் ஆகியோரின் பொதுசுகாதார நலனை கருத்தில் கொண்டு மேற்படி கரூர் நகரில் அமைந்துள்ள இரட்டை வாய்க்காலில் மழைநீர் தேங்காவண்ணம் வடிகால் மற்றும் இலகுரக வாகனம் செல்லும் வகையில் சாலை ஆகியவை அமைக்கும் பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2.50கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு உரிய தொழில்நுட்ப அனுமதி வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடம் கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு**
மன்றம் அனுமதிக்கலாம். (இ1/2484/2020)

தீர்மான எண்.1 அனுமதிக்கப்பட்டது.

2)கரூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் திடக்கழிவுகளை அகற்றும் பணிக்கு அவுட்சோர்சிங் முறையில் 220 பணியாளர்களை கொண்டு பிளாக் கேட் சொலியூசன், சென்னை என்ற நிறுவனத்தின் மூலம் 01.02.2020 முதல் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி பணியானது 31.01.2021ம் தேதியுடன் முதலாம் ஆண்டு காலம் முடிவடைகிறது. மேற்படி பணிக்காலத்தினை 01.02.2021 முதல் 31.02.2022 வரை ஓராண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்தும் மாவட்ட ஆட்சித் தலைவர் கரூர் அவர்களின் செயல்முறைகள் Roc.No.E1/4822/2020 நாள்.05.06.2020ல் அனுதிக்கப்பட்டுள்ளபடி தினக்கூலி பணியாளர்களுக்கான 2020–2021 விலை விகிதத்தின்படி நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கான விலை விகிதத்தினை உயர்த்தி வழங்கும்படியும் கோரியுள்ளார்.

எனவே, மேற்படி நிறுவனம் 01.02.2020 முதல் 31.01.2021 வரை ஓராண்டு காலம் முடிவடைவதால் மேலும் 2021–2022 ஆண்டிற்கு ஒப்பந்தத்தினை நீட்டிப்பு செய்து கொள்ளவும் கீழ்க்கண்டவாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கரூர் அவர்களின் 2020–2021 விலை விகிதமான தினக்கூலி நாள் ஒன்றுக்கு ரூ.402/– மற்றும் இதர படிகளான கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) | மாவட்டஆட்சியர் விலைவிகிதம் 2019-2020 | 402 | 220 | 365 | 32280600 |
| 2) | பொதுவருங்காலலைப்புநிதி(EPF) Employers EPF Contribution 13.36% | 53.70 | 220 | 365 | 4312110 |
| 3) | Employers ESI Contribution 4.75 % | 19.09 | 220 | 365 | 1532927 |
| 4) | Personnel Accidental Policies 2 % | 8.04 | 220 | 365 | 645612 |
| 5) | Uniform for workers 3% | 12.06 | 220 | 365 | 968418 |
| 6) | Safety equipments 4% | 16.08 | 220 | 365 | 1291224 |
| Administrative charges on wages (as per tender rate | | 17.50 | 220 | 365 | 1405250 |

| | | | | |
|---|---|---|---|---|
| quoted) | | | | |
| Rate per Workers | 528.47 | 220 | 365 | 42436141 |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)இச்செலவினம் திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியிலிருந்து அல்லது பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

3)மேற்கண்ட பணிக்கு செலவுத் தொகை ரூ.4,24,36,141/–யை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (எச்1/3280/2018)

தீர்மான எண்.2 அனுமதிக்கப்பட்டது.

3)அரசாணை எண்.380, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (FC) துறை, நாள்:09.11.2020 வாயிலாக 15வது நிதி குழு மான்யம் Tied Grantின்கீழ் முதல் தவணை தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.20452/2020/எல்எ3, நாள்:10.11.2020 வாயிலாக கரூர் நகராட்சிக்கு முதல் தவணை தொகையாக ரூ.2,97,99,221/– விடுக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நிதியின்கீழ் கரூர் நகராட்சியில் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| I)திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்காக மேற்கொள்ளப்பட பணிகளின் விவரம் | | |
| 1 | பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணிக்காக Robotic இயந்திரம் ஒன்று கொள்முதல் செய்தல் | 42.00 |
| 2 | பிரிவு–1 முதல் 5 வரையுள்ள பகுதிகளில் சேகரமாகும் திடக்கழிவுகளை வீடுவீடாக சென்று சேகரிப்பதற்காக பேட்டரி வாகனங்கள் (BOV) 25எண்ணிக்கைகள் கொள்முதல் செய்தல் | 45.00 |
| 3 | பிரிவு–6 முதல் 9 வரையுள்ள பகுதிகளில் சேகரமாகும் திடக்கழிவுகளை வீடுவீடாக சென்று சேகரிப்பதற்காக பேட்டரி வாகனங்கள் (BOV) 20எண்ணிக்கைகள் கொள்முதல் செய்தல் | 36.00 |
| 4 | திடக்கழிவுகளை அறைக்கும் இயந்திரம் 4 எண்ணிக்கை கொள்முதல் செய்தல் | 24.00 |
| II) குடிநீர் விவிநயோக மேம்பாட்டு திட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளின் விவரம் | | |
| 1 | அருகம்பாளையம் மெயின் ரோட்டில் 450எம்.எம்., ஏ.சி., பம்பிங் மெயின் அருகம்பாளையம் முதல் ஏர் வால்வு வரை மாற்றுதல் | 20.00 |
| 2 | அருகம்பாளையம் மெயின் ரோட்டில் 450எம்.எம்., ஏ.சி., பம்பிங் மெயின் லைன் அண்ணா காலனி முதல் ஏர் வால்வு வரை மாற்றுதல் | 19.00 |
| 3 | கரூர் நகராட்சிக்கு சொந்தமான கட்டளை தலைமை நீரேற்று நிலையத்தில் (தாந்தோணி) பொருத்தப்பட்டுள்ள 100HP மின்மோட்டாருக்கு பதிலாக 120HPx5000Lpmx70m Head திறனுள்ள ஒரு எண்ணிக்கை Horizontal Squirrel Cage Induction மோட்டார்/ ஸ்டாட்டர் / பம்ப் / கேபிள் பொருத்தி இயக்குதல் பணிகள் | 18.00 |
| 4 | கரூர் நகராட்சிக்கு சொந்தமான கட்டளை தலைமை நீரேற்று நிலையத்தில் (தாந்தோணி) பொருத்தப்பட்டுள்ள 75HP மின்மோட்டாருக்கு பதிலாக 120HPx5000Lpmx70m Head திறனுள்ள ஒரு எண்ணிக்கை Horizontal Squirrel Cage Induction மோட்டார்/ ஸ்டாட்டர் / பம்ப் / கேபிள் பொருத்தி இயக்குதல் பணிகள் | 18.00 |
| 5 | கரூர் நகராட்சிக்கு சொந்தமான கட்டளை தலைமை நீரேற்று நிலையத்தில் (சணப்பிரட்டி) பொருத்தப்பட்டுள்ள 50HP/ 35HP சப்மெர்சிபில் மோட்டாருக்கு பதிலாக 60HPx5000Lpmx50m Head திறனுள்ள 2 எண்ணிக்கை சப்மெர்சிபில் மோட்டார் / ஸ்டாட்டர் / பம்ப்/ கேபிள் பொருத்தி இயக்குதல் பணிகள் | 22.00 |
| 6 | கரூர் நகராட்சிக்கு சொந்தமான நெரூர் தலைமை நீரேற்று நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள 35HP (110Scheme) சப்மெர்சிபில் மோட்டார் | 7.00 |

| | | |
|---|---|---|
| | (பதிலி) 35HPx3000Lpmx50m Head திறனுள்ள ஒரு எண்ணிக்கை சப்மெர்சிபில் மோட்டார்/ ஸ்டாட்டர் / பம்ப்/ கேபிள் பொருத்தி இயக்குதல் பணிகள் | |
| 7 | கரூர் நகராட்சிக்கு சொந்தமான மூலக்காட்டனூர் உபநீருந்து நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள 60HP Horizontal Squirrel Cage Induction மோட்டார் பதிலாக 110HPx5000Lpmx50m Head திறனுள்ள ஒரு எண்ணிக்கை Horizontal Squirrel Cage Induction மோட்டார்/ ஸ்டாட்டர் / பம்ப் / கேபிள் பொருத்தி இயக்குதல் பணிகள் | 14.00 |
| 8 | கரூர் நகராட்சிக்கு சொந்தமான மூலக்காட்டனூர் உபநீருந்து நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள 75HP Horizontal Squirrel Cage Induction மோட்டார் பதிலாக 110HPx5000Lpmx50m Head திறனுள்ள ஒரு எண்ணிக்கை Horizontal Squirrel Cage Induction மோட்டார்/ ஸ்டாட்டர் / பம்ப் / கேபிள் பொருத்தி இயக்குதல் பணிகள் | 14.00 |
| 9 | கரூர் நகராட்சிக்கு சொந்தமான மூலக்காட்டனூர் உபநீருந்து நிலையத்தில் (சணப்பிரட்டி) பொருத்தப்பட்டுள்ள 25HP சப்மெர்சிபில் மோட்டார் (பதிலி) 25HPx1000Lpmx40m Head திறனுள்ள ஒரு எண்ணிக்கை Horizontal Squirrel Cage Induction மோட்டார்/ ஸ்டாட்டர் / பம்ப்/ கேபிள்/ குழய்கள் பொருத்தி இயக்குதல் பணிகள் | 6.00 |
| 10 | கரூர் நகராட்சிக்கு சொந்தமான மூலக்காட்டனூர் உபநீருந்து நிலையத்தில் (சணப்பிரட்டி) பொருத்தப்பட்டுள்ள 10HP மோனோபிளாக் மோட்டார் (பதிலி) 10HPx500Lpmx35m Head திறனுள்ள ஒரு எண்ணிக்கை மோனோபிளாக் மோட்டார்/ ஸ்டாட்டர் / பம்ப்/ கேபிள்/ குழய்கள் பொருத்தி இயக்குதல் பணிகள் | 1.50 |
| 11 | கரூர் நகராட்சிக்கு சொந்தமான மூலக்காட்டனூர் உபநீருந்து நிலையத்தில் (போக்குவரத்து நகர்) புதிதாக 5HP சப்மெர்சிபில் மோட்டார் 5HPx250Lpmx40m Head திறனுள்ள ஒரு எண்ணிக்கை சப்மெர்சிபில் மோட்டார்/ ஸ்டாட்டர் /பம்ப்/ கேபிள்/ குழய்கள் பொருத்தி இயக்குதல் பணிகள் | 1.00 |
| 12 | கரூர் நகராட்சிக்கு சொந்தமான வாங்கபாளையம் உபநீருந்து நிலையத்தில் 20HPx2000Lpmx60m Head திறனுள்ள ஒரு எண்ணிக்கை (பதிலி) சப்மெர்சிபில் மோட்டார்/ ஸ்டாட்டர் / பம்ப்/ கேபிள்/ குழய்கள் பொருத்தி இயக்குதல் பணிகள் | 3.00 |
| 13 | கரூர் நகராட்சிக்கு சொந்தமான பொன்நகர் உபநீருந்து நிலையத்தில் புதிதாக 20HPx2500Lpmx40mHead,20HPx900Lpmx50m Head, 25HPx 800Lpm x33m Head திறனுள்ள மூன்று எண்ணிக்கை சப்மெர்சிபில் மோட்டார்/ பம்ப்/ கேபிள் பொருத்தி இயக்குதல் பணிகள் | 5.50 |

மேற்கண்டவாறு பணிகளை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்கண்ட பணிகளுக்கான செலவினத்தினை 15வது நிதி குழு மான்யம் Tied Grantஇன்கீழ் வழங்கப்பட்ட முதல் தவணை தொகையின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/1349/2021)

தீர்மான எண்.3 அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர்

கரூர் நகராட்சி